செ.வெ.எண்.171 நாள்.14.03.2018.

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், கடங்கநேரி, காடுவெட்டி கிராமங்கள் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் 150 பயனாளிகளுக்கு ரூ.15.24 இலட்சம் மதிப்பில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

--------

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், கடங்கநேரி, காடுவெட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பயன்பெறும் வகையில், வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் மனுநீதி நாள் முகாம் இன்று (14.03.2018) நடைபெற்றது. இம்மனு நீதிநாள் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப, அவர்கள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். தொடர்ந்து, 150 பயனாளிகளுக்கு ரூ.15.24 இலட்சம் மதிப்பில் அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

மனுநீதி நாள் முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

மாவட்ட தலைநகரங்களிலிருந்து, தொலைதூர கிராம மக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து துறை அலுவலர்களும் அக்கிராமத்திற்கு சென்று அரசின் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்து கிராம மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நடத்துவது தான் மனுநீதி நாள் முகாம் ஆகும். அரசு அலுவலர்கள் அரசின் திட்டங்களை பெற தகுதிகள் என்ன என்பதையும், எவ்வாறு பெற வேண்டும் குறித்தும் தெரிவித்துள்ளவைகளை பொதுமக்கள் அறிந்து கொண்டு, அரசின் திட்டங்களை பெற வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் காப்பீடு திட்டத்தில் தனியார் மருத்துவ மனைகளில் இலவசமாக சிகிச்சைப் பெற்றுக் கொள்ளலாம். டெங்கு காய்ச்சல் குறித்து அனைவரும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். காய்ச்சல் வந்தால் உடனடியாக அரசு மருத்துவரை அணுக வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தில், கடந்த நான்கு மாதங்களில் 1,40,000 தனி நபர் இல்ல கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளது. அனைவரும் கழிப்பறைகளை பயன்படுத்த வேண்டும். திறந்த வெளியில் மலம் கழிப்பதால் சுகாதார பாதிப்புகள் ஏற்படும்.

இப்பகுதியில், ஏற்கனவே மனுநீதி நாள் முகாமினையொட்டி, 129 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இதில் 38 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்று, வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வருவாய்த் துறை, மாவட்ட ஆதிதிராவிடர் நலத் துறை ஆகிய துறைகளின் மூலம் 150 பயனாளிகளுக்கு ரூ.15 இலட்சத்து 23 ஆயிரத்து 732/– மதிப்பிலான உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளது. இளைஞர்களுக்கு பல்வேறு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திட்டத்தின் கீழ், இளைஞர்கள் தொழில் தொடங்கிட மத்திய, மாநில அரசுகள் ரூ.10 இலட்சம் முதல் ரூ.1 கோடி கூடிய கடனுதவி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. எனவே, இளைஞர்கள் மாவட்ட தொழில் மைய அலுவலகத்தினை அணுகி பயன்பெற வேண்டும். தமிழக அரசின் திட்டங்களை பயன்படுத்தி உங்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திக் கொள்ள வேண்டும். இங்கு பெறப்படும் மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் தகுந்த நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென பேசினார்.

முகாமில், வருவாய்த் துறையின் மூலம் இலவச வீட்டுமனைப் பட்டா 20 பயனாளிகளுக்கு ரூ.1.05 இலட்சம் மதிப்பீட்டில் வீட்டுமனைப் பட்டாக்களையும், முதியோர் உதவித் தொகை 8 பயனாளிக்கு மாதந்தோறும் ரூ.1000/– பெறுவதற்கான உத்தரவினையும், உழவர் பாதுகாப்புத் திட்ட அடையாள அட்டை 7 பயனாளிகளுக்கும், வேளாண்மைத்

துறையின் மூலம் சூரிய விளக்கு பொறி 3 நபர்களுக்கு தலா ரூ.3 ஆயிரம் மானியத்திலும், ரொட்டேட்டர் கருவி 1 பயனாளிக்கு ரூ.35 ஆயிரம் மானியத்திலும், பவர் ஸ்பிரேயர் 1 பயனாளிக்கு ரூ.3 ஆயிரம் மானியத்திலும், தோட்டக்கலைத் துறையின் மூலம் கத்தரி குழித்தட்டு நாற்று 1 பயனாளிக்கு ரூ.8 ஆயிரம் மானியத்திலும், வீட்டு காய்கறி விதைகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 4 பயனாளிகளுக்கு ரூ.192/– மானியத்திலும், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் மண்ணில்லா பசுந்தீவனம் 2 நபர்களுக்கு ரூ.35,540/– மானியத்திலும், புறக்கடை கோழி வளர்ப்பு 25 நபர்களுக்கு ரூ.62,500/– மானியத்திலும், கறிக்கோழி வளர்ப்பு 1 பயனாளிக்கு ரூ.2,68,750/– மானியத்திலும், விலையில்லா வெள்ளாடுகள் 75 நபர்களுக்கு ரூ.9,75,750/– மதிப்பிலும், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் 2 நபர்களுக்கு தலா ரூ.8 ஆயிரம் மதிப்பிலான விலையில்லா தையல் இயந்திரங்களையும் என மொத்தம் 150 பயனாளிகளுக்கு ரூ.15.24 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

முன்னதாக, வேளாண்மை துறை, தோட்டக்கலை துறை, கால்நடை பராமரிப்பு துறை, சுகாதாரத் துறை, சமூகநலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகிய துறைகளின் மூலம் பொதுமக்கள் பார்வைக்காக அமைக்கப்பட்ட கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

இம்முகாமில், தென்காசி கோட்டாட்சித் தலைவர் திரு.ராஜேந்திரன், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.சங்கரலிங்கம், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, கால்நடை பராமரிப்புத் துறை, இணை இயக்குநர் மரு.ராஜேந்திரன், துணை இயக்குநர்கள் மரு.அருணாசலகனி, மரு.முருகையா, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.கல்யாணசுந்தரம், ஆலங்குளம் வட்டார தோட்டக்கலை அலுவலர் திரு.சங்கரவேல், உதவி தோட்டக்கலை அலுவலர் திரு.ஹரிகரன், துணை வேளாண்மை அலுவலர் திரு.முருகன், ஆலங்குளம் வட்டாட்சியர் திரு.பிரபாகரன் அருண்செல்வன், சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் திரு.துரைபாண்டியன் உள்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.